உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 10-1-2013 வரை ஆகும். அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 5-12-2013 வரை ஆகும். பிற பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, நிர்வாகக் குழு மற்றும் கல்விக் குழு ஆகியவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் இன்றிலிருந்து (17-8-2011) மூன்றாண்டுக் காலம், அதாவது, 16-8-2014 வரை ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவுடையும்.

4. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 16-8-2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதன்-விலங்கு மோதல் (Man-Animal Conflict) தமிழகத்திலே மிக மோசமான நிலையிலே இருந்து வரக்கூடிய ஒரு சூழலிலே, அதனுடைய விபரீதங்களையெல்லாம் கருத்தில் எடுத்துக்கொண்டு, சிறப்பான ஆட்சியைத் தந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இதில் பாதிக்கப்படக்கூடிய மனிதர்களுக்கு மட்டுமல்ல; விலங்கினங்களுக்கு மட்டுமல்ல; பறவைகளுக்குக்கூட சிறப்பான முறையிலே ஒரு இழப்பீட்டை அறிவித்திருப்பதை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக மனமார வரவேற்கிறேன்; நன்றி தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2011 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

முற்பகல் 10-10

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், வன விலங்குகளால் பாதிக்கப்படக்கூடிய மனிதர்களுக்கு மட்டுமல்ல; விவசாயிகளின் பயிர்கள் நாசப்படுவது. இருக்கக்கூடிய பறவைகள் பாதிக்கப்படுவது, வீடுகள் இடிக்கப்படுவது, சேதாரப்படுத்தப்படுவது போன்றவற்றிற்கெல்லாம் இன்றையதினம் அவையிலே அறிவித்திருக்கக்கூடிய அறிவிப்பு விவசாயிகளுக்கும், வன விலங்குகளுக்கு மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியைத் தரும் என்று நான் கருதுகிறேன். இந்த அறிவிப்பை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

*__திரு. க. பாலகிருஷ்ணன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளால், வன ஓரத்திலே வாழக்கூடிய விவசாயிகள் உயிரிழப்பது, விவசாயப் பயிர்கள் நாசமடைவது, வீடுகள் சேதமடைவது போன்ற இந்தக் கொடுமைகள் பல்லாண்டுகளாக நடைபெற்றாலும், அவர்களுக்குப் போதுமான நிவாரணம் என்பது இல்லையென்ற கோரிக்கை திரும்பத் திரும்ப எழுந்திருக்கின்ற சூழ்நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த மக்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களுக்கு வாழ்வளிக்கிற முறையில், வன ஓர விவசாயிகள், அங்கு இருக்கிற மனித உயிர்கள், விவசாயப் பயிர்கள், வீட்டிலே இருக்கக்கூடிய கோழி போன்றவற்றின் சேதாரங்களுக்கும் நிவாரணத்தை உயர்த்தி வழங்கியிருப்பது உண்மையிலே அந்த மக்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய நல்ல செய்தி. முதல்வர் அவர்களுடைய அறிவிப்பை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வரவேற்று அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளால் மனித குலத்திற்கும், விலங்கினங்களுக்கும், பறவையினங்களுக்கும், அதேபோல, பிற பொருள்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு இதுநாள் வரையிலும் இல்லாத அளவிற்கு இப்போது முழுமையான அளவில், எதிர்பார்த்த அளவில் இழப்பீடுகளை வழங்குவதற்கு, நஷ்டஈட்டை வழங்குவதற்கு பெருந்தன்மையோடு ஆணையிட்டிருக்கக்கூடிய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு, புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காக்கை குருவி, எங்கள் ஜாதி, நீள் கடலும், மலையும் எங்கள் கூட்டம்" என்று சொன்ன மகாகவி பாரதியாரின் உருவமாய், "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று சொன்ன அருட்பெருஞ்சோதி வள்ளலாரின் உருவமாய் இன்றைக்குப் பாரதியார் சொன்ன அந்தப் பாடலுக்கு ஏற்ப, வள்ளலாரின் வாய்மொழிக்கேற்ப, வாழ்ந்து கொண்டிருக்கிற அருட்பெருஞ்சுடர், நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும்கூட தமிழகத்திலே நிவாரணம் இருக்கிறது என்கிற அளவில் அப்படிப்பட்ட ஒரு மிகப் பெரிய கருணையை உவந்து அளித்திருக்கிறார்கள். அதை வாழ்த்தி, வரவேற்கிறேன். இதில் என்னுடைய கீழ்வைத்தினான்குப்பம் தொகுதிதான் அடிக்கடி பாதிக்கப்படுகின்ற ஒன்றாக இருக்கிறது. ஆகவே, தொகுதி மக்களின் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *16-8-2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை மற்றும் அதன்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் வேறு ஏதோ* issue-*ல் பேச இருப்பதாகத் தெரிகிறது. இதில் நீங்கள் நன்றியை மட்டும்தான் சொல்ல முடியும். (குறுக்கீடு) ஆமாம்.* No discussion. *விதி 110-ல் நன்றி மட்டும்தான் சொல்ல முடியும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.*

2011 ஆகஸ்ட் 17]

திரு. ம. கலை அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் காலை நேரத்திலே அறிவித்திருப்பதை குறிப்பாக, சிறப்பாகச் சொல்லவேண்டுமானால், அணைக்கட்டுத் தொகுதியிலே இருக்கக்கூடிய, மலைகளிலிருந்து வரக்கூடிய வன விலங்குகளால் ஏற்படுகின்ற இழப்புக்கு மிகப் பெரிய உதவி, நிவாரணமாக தாய் உள்ளத்தோடு அறிவித்திருப்பதை நாங்கள் மனதார வரவேற்கிறோம்.* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையின்மீது நன்றி மட்டும் தெரிவிக்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்துள்ள அறிவிப்பு என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) உறுப்பினர் நன்றி தெரிவித்தது மட்டும் அவைக் குறிப்பில் இருக்கும். மற்றவை எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது.*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்)

5. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *16-8-2011 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை மற்றும் அதற்கு முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேளாண்மைத் துறை புதிய யுக்தியைப் படைத்து, அகில உலகமே வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிற, ஆற்றல்மிக்க மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*